IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

O.S.No. 45 /2018

Deposition of witness for PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : சதாசிவம் | Caste | : - |
| Father's Name | : மார்கபந்து | Calling | : மின்வாரியத்திலிருந்து ஓய்வு பெற்றுவிட்டேன் |
| Village | : சித்தூர் | Religion | : இந்து |
| Taluk | : ஆந்திரா மாநிலம் | Age | : 68 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 19 day of September, 2019.

Cross Examination

இந்த வழக்கை பற்றிய முழுவிவரமும் எனக்குதெரியும். என்னுடன் உடன் பிறந்தோர் கிருஷ்ணன், நீலமேகம் மற்றும் ஒரு பெண் என்றால் சரிதான். அந்த பெண்ணின் பெயர் கன்னியம்மாள் ஆகும். எனக்கு திருமணம் ஆகி 43 வருடங்கள் ஆகிறது. எனக்கு திருமணம் ஆனவுடன் ஆந்திரா சென்று தனிக்குடித்தனம் நடத்தினேன் என்றும், கூட்டுக்குடும்பமாக இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. பொது குடும்ப சொத்தை பொறுத்து 1966-ல் எனது சகோதரி கன்னியம்மாளை நல்ல சீர்வரிசை செய்து திருமணம் செய்து கொடுத்தவிட்டபடியால் அவருக்கு பாகம் பிரிவினை செய்து கொடுக்கவில்லை. எனது பெற்றோர் சுயமாக சம்பாதித்த சொத்து என்றும், அந்த சொத்தை பொறுத்து கன்னியம்மாளுக்கும் பாகம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்து நீலமேகத்தினுடையது என்றால் சரியல்ல. எனது சகோதரிக்கு பாகம் கொடுக்காததால் இந்த வழக்கை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

(Sd/-)..R.Rajamaheswar
DISTRICT MUNSIF
KATPADI.